சுருக்கம்

பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - திருமதி. மு. உமா, க/பெ. மரு. கே. செல்வராஜ் (லேட்) இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் - பணிவரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

காலநடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப-7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது ஐப்பசி மாதம் 14-ம் நாள்

அரசாணை (டி) எண்.503

நாள் 31.10.2022

படிக்கப்பட்டவை.

1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2) கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடித ந.க.எண். 70/ஆர்3/2017, நாள் 26.07.2022.

------

ஆணை:

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடிதத்தில், சேலம் மண்டலம், ஆத்தூர் கால்நடை மருத்துவமனையில், கால்நடை உதவி மருத்துவராக பணிபுரிந்து 31.01.2006 அன்று பணியிடை மரணமடைந்த மரு.கே.செல்வராஜ் என்பவரின் மனைவி திருமதி.மு.உமா என்பவருக்கு கருணை அடிப்படையில் கால்நடை பராமரிப்பு துறையின் தலைமையலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 31.01.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் எனவே தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 31.01.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை உரிய ஆவணங்களுடன் அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் இளநிலை உதயியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.மு.உமா என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 31.01.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத்

தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண். 16560/க்யூ.1/2022-1 நாள் 6.10.2022 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.கு. எண். 3298118/ஜி2/2022 நாள் 18.10.2022 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.
திருமதி. மு. உமா, இளநிலை உதவியாளர்
(ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்,
சென்னை-35. வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
நகல்
தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு,
பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

2.11.22
பிரிவு அலுவலர்
2.11.22